

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (15.11.2025) தொழிலதிபரும், தமிழ் இசை சங்கத்தின் மதிப்பியல் செயலாளருமான ஏ.சி.முத்தையா அவர்களின் இல்லத்திற்கு நேரில் சென்று அவரது உடல் நலம் குறித்து கேட்டறிந்தார். உடன் அவரது குடும்பத்தினர் உள்ளனர்.



விழுப்புரம் மத்திய மாவட்ட பொறுப்புக் குழு உறுப்பினர், மேனாள் நகர மன்ற தலைவர் விழுப்புரம் இரா.ஜனகராஜ் இளைய மகன் அருண்குமார் திருமணத்தை முன்னாள் அமைச்சர் கழக துணை பொதுச்செயலாளர் முனைவர் க.பொன்முடி எம்.எல்.ஏ அவர்கள் தலைமை தாங்கி திருமணத்தை நடத்தி வைத்து மணமக்களை வாழ்த்தினார்.விழுப்புரம் தெற்கு மாவட்ட கழக செயலாளர் டாக்டர்.பொன். கௌதமசிகாமணி, மாவட்ட ஊராட்சி குழு தலைவர் ம.ஜெயச்சந்திரன் உள்ளிட்ட பலர் உடனிருந்தனர் .

### ராணுவ ஒப்பந்தங்கள்!

# முப்படைகளின் தலைமைத் தளபதி குற்றச்சாட்டு!

## திறன்கள் குறித்து உண்மை விவரங்களை தெரிவிப்பதில்லை!

புதுடெல்லி, நவ. 17-

ராணுவ ஒப்பந்தங்களை பெற்றுள்ள இந்திய நிறுவனங்கள், தரமான கருவிகளை உரிய நேரத்தில் வழங்குவதில்லை என முப்படைகளின் தலைமைத் தளபதி அனில் சவுகான் தெரிவித்துள்ளார்.

டெல்லியில் நடைபெற்ற கருத்தரங்கம் ஒன்றில் ஜெனரல் அனில் சவுகான் கலந்து கொண்டார். அப்போது பேசிய அவர்,

பாதுகாப்புத்துறைக்கான சீர்திருத்தங்கள் ஒருவழிப் பாதை அல்ல என்றும், உள்நாட்டு நிறுனங்கள் தங்களின் திறன்கள் குறித்து உண்மையான விவரங்களை தெரிவிப்பதில்லை என்றும் கூறினார். இந்திய ராணுவத்துடன் ஒப்பந்தங்களை மேற்கொண்டுள்ள நிறுவனங்கள் குறித்த காலக்கெடுவிற்குள் கருவிகளை வழங்கவில்லை என்றால், அதனால் ஏற்படும் இழப்புகள் பெரிதாக இருக்கும் என்றும், இது போன்ற இக்கட்டான சூழ்நிலையை ஏற்படுத்தும் நிறுவனங்கள் தேச பக்தியுடன் நடந்த கொள்ள வேண்டும் என்றும் அவர் கூறினார்.

பல இந்திய நிறு வனங்கள் தங்களின் திறன்கள் குறித்து உண்மைக்கு புறம்பான, மிகைப்படுத்தப்பட்ட விவரங்களை அளித்துள்ளதாக ராணுவத் தளபதி தன்னிடம் கூறியதாகவும் முப்படைகளின் தலைமைத் தளபதி அனில் சவுகான் தெரிவித்தார். முப்படை களின் அவசரக்கால கொள்முதல்களை விரைவு படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகவும் அனில் சவுகான் கூறினார்.

### மண்டபம் வடக்கு துறைமுகத்தில்

# ரூ.25 கோடியில் தூண்டில் வளைவு அமைக்கும் பணி!

## காதர்பாட்சா முத்துராமலிங்கம் எம்.எல்.ஏ. தொடங்கி வைத்தார்!

இராமநாதபுரம், நவ.17 -

மண்டபம் வடக்கு துறைமுகத்தில் 25 கோடி மதிப்பீட்டில் தூண்டில் வளைவு துறைமுகம் அமைக்கும் பணியை மாவட்ட கழகச் செயலாளர் சட்டப்பேரவை உறுப்பினர் காதர்பாட்ஷா முத்துராமலிங்கம் தொடங்கி வைத்தார்.

இராமநாதபுரம் மாவட்டம், மண்டபம் வடக்கு துறைமுகம் மேற்குவாடி கடற் பகுதியில் 250 க்கும் மேற்பட்ட விசைப்படகுகள் மற்றும் 150 க்கும் மேற்பட்ட நாட்டுப்படகுகள் மீன்பிடி தொழிலில் ஈடுபட்டு வருகிறது. ஒவ்வொரு புயல் காலங்களில் கடல் சீற்றம் மற்றும் சூறை காற்று காரணமாக படகுகள் சேதமடைந்து வந்தது.

இதனைதொடர்ந்து, தூண்டியல் வளைவு துறைமுகம் அமைக்க வேண்டும் என தொடர்ந்து மீனவ சங்கத்தினர் கோரிக்கை விடுத்து வந்தனர்.

இந்த நிலையில், மீன்வளம், மீனவர் நலத்துறை சார்பில் ரூ.25 கோடி மதிப்பில் தூண்டில் வளைவு அமைப்பதற்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது.

இதனைதொடர்ந்து, தூண்டியல் வளைவு துறைமுகம், மீன் ஏலக்கூடம்,வலை பின்னும் கட்டடம் கட்டுமான பணி மற்றும் தொடக்க விழா மேற்குவாடி துறை முகத்தில் நடைபெற்றது.

இராமநாதபுரம் சட்டப்பேரவை உறுப்பினர் காதர்பாட்ஷா முத்து ராமலிங்கம் கலந்துகொண்டு பணியை தொடங்கி வைத்தார்.

இதில், மீன்பிடி துறைமுக திட்டப் பணி செயற் பொறியாளர் கணபதி ரமேஷ், ராமநாதபுரம் மண்டல

மீன்வளம், மீனவர் நலத் துறை துணை இயக்குநர் வேல்முருகன்,

உதவி இயக்குநர்கள் சிவக்குமார் , தமிழ் மாறன், திமுக தலைமை செயற் குழு உறுப்பினர் அஹமது தம்பி, மண்டபம் பேரூர் மன்றத் தலைவர் ராஜா, திமுக நகர் செயலாளர் அப்துல் ரஹ்மான் மரைக்காயர்,பேரூராட்சி உறுப்பினர்கள் முபாரக், பூவேந்திரன், முருகானந்தம், சாதிக் பாட்ஷா, வாசிம் அக்ரம்,

மீனவர் சங்க நிர்வாகிகள் பாலசுப்ரமணியன், ஜாகீர உசேன், செல்வக்குமார், சுல்தான், காதர் முகைதீன், சர்புதீன், , ஆசாத், காளிமுத்து, கல் பாஷா உள்பட பலர் கலந்து கொண்டனர்.

### துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் பிறந்த நாள்!

# அம்பாசமுத்திரத்தில் ஆலோசனைக் கூட்டம்!

## மாவட்டப் பொறுப்பாளர் இரா.ஆவுடையப்பன் தலைமையில் நடைபெற்றது!

நெல்லை.நவ.17.

நெல்லை மேற்கு மாவட்டம் அம்பாசமுத்திரம் தொகுதியில் கழக இளைஞர் அணி செயலாளர் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாள் முன்னிட்டு, இளைஞரணி சார்பில்,செய்ய வேண்டிய பணிகள் குறித்து நெல்லை மேற்கு மாவட்டம் அம்பாசமுத்திரம் சட்டமன்ற தொகுதி இளைஞரணி அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள் ஆலோசனை கூட்டம் நெல்லை மேற்கு மாவட்ட அலுவலகத்தில் நெல்லை மேற்கு மாவட்ட பொறுப்பாளர் இரா.ஆவுடையப்பன் தலைமையில் துணை அமைப்பாளர் கள் வேல் முருகன்,ஆகாஷ் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது.

மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் ஜான் ரபீந்தர் வரவேற்புரையாற்றினார்.

நிகழ்வில் மாநில விவசாய தொழிலாளர் அணி துணை செயலாளர் கணேஷ்குமார் ஆதித்தன்,வி.கே.புரம் நகர இளைஞரணி அமைப்பாளரும் நகர் மன்ற தலைவருமான செல்வ சுரேஷ் பெருமாள்,அம்பாசமுத்திரம் மணிகண்டன்,கல்லிடைக்குறிச்சி ஜாவித்,வீரவநல்லூர் மணி, மணிமுத்தாறு இசக்கிமுத்து பாண்டி, சேரை மேற்கு முத்துக்குமார், சேரை கிழக்கு பாண்டி,சேரை பேரூர் இசக்கிமுத்து,பத்தமடை ஜமால், மேலச்செவல் பிரபாகரன் மற்றம் ஒன்றிய,நகர,பேரூர் இளைஞரணி துணை அமைப்பாளர்கள் கலந்து கொண்டனர்.

இந்த கூட்டத்தின் கழக இளைஞர் அணி செயலாளர் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாள் முன்னிட்டு,

ஒன்றிய,நகர,பேரூர் பகுதிகளில் ஏழை,எளிய மக்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்குவது என்றும்.

(SIR) பணியில் இளைஞர் அணி உடனிருந்து பணியாற்றுவது என்றும்.

இளைஞர் அணி செயலாளர் அவர்கள் விளையாட்டு துறையை ஊக்குவிப்பதை அவர் வழி நின்று இளைஞர் அணி சார்பில் விளையாட்டு போட்டிகள் நடத்துவது. என்றும் தீர்மானிக்கப்பட்டது.

# ரூ.747 கோடியில் மாணவ - மாணவியர்க்கு மிதிவண்டி வழங்கும் விழா!

## சிவகங்கையில் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் தொடங்கி வைத்தார்!

சிவகங்கை, நவ. 17 -

கழக இளைஞர் அணி செயலாளர் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நவம்பர் 14,15, , ஆகிய தேதிகளில் சிவகங்கை மாவட்டத்தில் இரண்டு நாட்கள் சுற்றுப்பயணம் செய்து பல்வேறு நிகழ்ச்சிகளில் பங்கேற்கிறார் . அதில் 14ம்தேதி காலை முதல் நாள் நிகழ்ச்சியாக சென்னையிலிருந்து திருச்சிக்கு விமானம் மூலம் துணை முதலமைச்சர்வருகை தந்தார். திருச்சிக்கு வருகை தந்த துணை முதல மைச்சரை சிவகங்கை மாவட்ட கழக செயலாளர் கூட்டுறவு துறை அமைச்சர் கே.ஆர். பெரியகருப்பன் வரவேற்றார்.பின்னர் அங்கிருந்து கார் மூலம் காரைக்குடி புறப்பட்டு சென்றார்.

காரைக்குடி அழகப்பா மாதிரி மேல்நிலைப் பள்ளியில் பள்ளிக்கல்வித்துறை, பிற்பட்டோர் நலத்துறை சார்பில் மாணவ மாணவிகளுக்கு மிதிவண்டி வழங்கும் திட்டம் சிறந்த பள்ளிகளுக்கான விருது குழந்தைகள் தின விழா ஆகிய முப்பெரும் விழா மாவட்ட ஆட்சியர் திருமதி கா.பொற்கொடி தலைமையில் நடைபெற்றது. இந்த நிகழ்ச்சியில் கூட்டுறவுத்துறை அமைச்சர்கே ஆர். பெரிய கருப்பன் முன்னிலை வகித்தார் .

நிகழ்ச்சியில் அமைச்சர்கள் அன்பில் மகேஷ் பொய்யாமொழி , சிவ.வி. மெய்யநாதன் எம்.எல்.ஏக்கள் எஸ்.மாங்குடி, திருமதி தமிழரசிரவிக்குமார், மேயர் எஸ்.முத்துதுரை, துணை மேயர்நா. குணசேகரன், கல்வித்துறை செயலாளர் முனைவர் சந்திர மோகன், பிற்பட்டோர் நலத்துறை செயலாளர் சரவண வேல்ராஜ், பள்ளி கல்வித்துறை இயக்குனர்கள் கண்ணப்பன் மற்றும் இயக்குனர்கள் குப்புசாமி, நரேஷ், மாவட்ட வருவாய் அலுவலர் திருமதி செல்வ சுரபி,அழகப்பா பல்கலைக்கழக துணை வேந்தர் முனைவர் க. ரவி ஆகியோர் கலந்து கொண்டார்கள்.

இந்த கூட்டத்தில் மாநில அளவில் ரூபாய் 747 கோடி மதிப்பிலான 5 லட்சத்து 34,000 பள்ளி மாணவ மாணவிகளுக்கு விலையில்லா மிதிவண்டி வழங்கும் திட்டத்தினை துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் தொடங்கி வைத்து சிறப்புரை ஆற்றினார் .

மேலும் குழந்தைகள் தின விழாவை முன்னிட்டு குழந்தைகளுக்கு வாழ்த்துக்களை கூறினார் .சிறந்த பள்ளிகளுக்கான விடுதலை வழங்கி சிறப்புரை யாற்றினார் .

இந்த நிகழ்ச்சியில் முன்னாள் அமைச்சர் மு .தென்னவன் மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் பாலதண்டாயுத பாணி திட்ட இயக்குனர் அரவிந்த், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் சிவபிரசாத், தமிழர் இயக்க பேரவை பொதுச் செயலாளர் சுப. வீரபாண்டியன் தாசில்தார் ராஜா, தேவகோட்டை உதவி ஆட்சியர் ஆயுஸ் வெங்கட் பட், மாவட்ட அவைத் தலைவர் வழக்கறிஞர் அ.கணேசன், மாவட்ட கழக துணைச் செயலாளர்கள் த.சேங்கைமாறன், திருமதி ஜோன்ஸ் ரூசோ, பொதுக் குழு உறுப்பினர் பள்ளத்தூர் கே .எஸ் .ரவி ஒன்றிய செயலாளர்கள் கே.ஆர். ஆனந்த் சுப.சின்னதுரை, மாவட்ட ஆதிதிராவிடர் நலக்குழு தலைவர் கொத்த மங்கலம் சேது, மாநில இலக்கிய அணி துணை செயலாளர் மருது அழகு ராஜ், காரைக்குடி சட்ட மன்ற தொகுதி பொறுப்பாளர் நல்ல சேதுபதி, மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் நாகனி செந்தில்குமார் மாவட்ட செய்தி தொடர்பாளர் அ.அயூப் கான் மற்றும் பள்ளிக்கல்வித்துறை மாவட்ட பிற்பட்டோர் நலத்துறை அதிகாரிகள் அலுவலர்கள், மாணவர்கள் பொதுமக்கள் கலந்து கொண்டார்கள். விழாவில் பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் குழந்தைகள் தின விழா வினை முன்னிட்டு அனுப்பி இருந்த வாழ்த்து செய்தியினை வாசித்தார்.

15ஆம் தேதி சனிக்கிழமை காலை காரைக்குடியில் இருந்து புறப்பட்டு கோவிலூரில் கழகக் கொடியினை ஏற்றி வைக்கிறார் . அதை தொடர்ந்து திருப்பத்தூர் சிங்கம்புணரி சாலையில் மாவட்ட கழக செயலாளர் அமைச்சர் கேஆர்.பெரிய கருப்பன் தலைமையில் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கு சிறப்பான வரவேற்பு அளிக்கப்பட்டது.

அதனை தொடர்ந்து சிங்கம்புணரியில் புதிதாக கட்டப்பட்டுள்ள பேரூராட்சி மன்ற அலுவலக கட்டடங்களை திறந்து வைக்கிறார். 10 மணி அளவில் முன்னாள் அமைச்சர் செ.மாதவனால் கட்டப்பட்ட அண்ணா மன்றம் தற்போது புதுப்பிக்கப்பட்டு இரண்டு மாடி களுடன் கட்டப்பட்டுள்ளது. முத்தமிழறிஞர் கலைஞர் ,முன்னாள் அமைச்சர் செ.மாத வன்ஆகியோரது சிலைகளை துணை முதலமைச்சர் திறந்து வைத்தார்.

அதை தொடர்ந்து கிருங்கா கோட்டையில் சிறுகதை மன்னன் எஸ் .எஸ். தென்னரசு மார்பளவு வெங்கல சிலையினை திறந்து வைத்தார். அதை தொடர்ந்து மாலை 3 மணி அளவில் சிங்கம்புணரி பாரி வள்ளல் மெட்ரிக் மேல்நிலைப் பள்ளியில் முன்னாள் அமைச்சர் செ.மாதவன் மணிமண்டபம் அவரது திருஉருவச்சிலையினை

திறந்து வைத்தார். அதை தொடர்ந்து மாவட்ட அளவிலான அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கினார் .



மதுரை மாவட்டம் மடீட்சியா அரங்கில் கூட்டுறவுத்துறை சார்பில் 72வது அனைத்திந்திய கூட்டுறவு வார விழா 2025 முன்னிட்டு நடைபெற்ற நிகழ்ச்சியில் சிறந்த கூட்டுறவு சங்கங்களுக்கு கேடயங்கள் மற்றும் மகளிர் சுய உதவிகுழுவினர் உள்ளிட்ட பயனாளிகளுக்கு பல்வேறு அரசு நலத்திட்ட உதவிகளை வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி வழங்கினார். மேலும் இந்நிகழ்வில் மதுரை மண்டல கூட்டுறவு சங்கங்களின் இணைப்பதிவாளர் சதீஷ்குமார், மதுரை மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி இணைப்பதிவாளர் வாஞ்சிநாதன் உள்ளிட்ட கூட்டுறவுத் துறை அதிகாரிகள் திரளான பயனாளிகள் பங்கேற்றனர்.



மதுரை மாநகர் மாவட்டம் மத்திய தொகுதிக்கு உட்பட்ட ஆரப்பாளையம் 1ம் பகுதி சேர்ந்த ஆனந்த மெமோரியல் பள்ளியில் 107, 108, 109, பாகத்தில் S I R வாக்கு சேகரிக்கும் பணி 58வட்ட கழக செயலாளர் சீனிரமேஷ் மற்றும் 57வது வட்ட செயலாளர் ஆட்டோ சுரேஷ் மற்றும் 57அ பொறுப்பாளர் துரை மணி ஆகியோர் தலைமையில் ஆரப்பாளையம் 1ம் பகுதி கழக செயலாளர் எஸ்.எஸ். மாறன் முன்னிலையில் மாநில கழக பொது குழு உறுப்பினர் வைகை பரமன் துவங்கி வைத்தார். உடன் BLA 2 நிர்வாகிகள் பாண்டி, வெள்ளி மூர்த்தி, கரோலினா தேவி, மற்றும் இளைஞரணி நிர்வாகிகள் ராம் பிரசாத், T.பிரகாஷ், முத்துக்குமார், ரவிசங்கர், சாகுல் , பாலு, தீபக், மற்றும் R கார்த்திகேயன், அஜித்குமார் , பூவலிங்கம் ஆகியோர் கலந்து கொண்டனர்.



மண்டபம் வடக்கு துறைமுகத்தில் 25 கோடி மதிப்பீட்டில் தூண்டில் வளைவு துறைமுகம் அமைக்கும் பணியை மாவட்ட கழகச் செயலாளர் சட்டப்பேரவை உறுப்பினர் காதர்பாட்ஷா முத்துராமலிங்கம் தொடங்கி வைத்தார். இதில் கழக நிர்வாகிகள் பலர் பங்கேற்றனர்.